**தேசிய விளையாட்டுக்கள் நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கம் தவிர தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் நியாயமான வகையில் குறிப்பிடக்கூடிய வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல் .

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள்

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனத்திற்கான தேவைப்பாடாக உள்ளது.

#### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்கு விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| விளையாட்டு அமைச்சினால் வெளியீடொன்றாக வெளியிடப்பட்ட 'கெளிபத சரணிய'' என்ற புத்தகங்கள் 1000 அச்சிடுவதற்னகாக தனியார் நிறுவனமொன்றுக்கு 2019 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்தமை | 1,050,000 | i சரியான புத்தகங்களின் அளவு களஞ்சியத்திற்கு கிடைத்ததாக உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.<br>ii இருப்பு புத்தகம் முறையாக பேணப்படவில்லை. | இவ்வெளியீட்டில் 1000 பிரதிகள் கிடைத்துள்ளதுடன் சனாதிபதி விளையாட்டு விருது வழங்கலில் பகிர்ந்தளிக்கப்பட்டதன் பின்னர் தற்போது 155 புத்தகங்கள் எஞ்சியுள்ளன. இது தொடர்பாக இருப்பு புத்தகங்களில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | புத்தகங்கள் களஞ்சியத்திற்கு கிடைக்கும் போது இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் பெறுகைய உறுதிப்படுத்துவதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 80,000 தொகையான பாதகுாப்பு வைப்புக்கள் காலாவதியாகய வைப்பாக இனங்கண்டு அரச | தியகம மஹிந் ராஜபக்ஷ விளையாட்டரங்கின் விளையாட்டரங்கை ஒதுக்குவதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட பணம் பாதுகாப்பு பணமாக | பாதுகாப்பு வைப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கப்பட்டுள்ளதுடன அப்பணத்தை கோரும் போது மீண்டும் வழங்க வேண்டியிருப்பதால் வருமானத்திற்கு எடுக்காமல் வைப்புக் கணக்கில் பேணிச் செல்லப்பட்டிருந்தன | |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டில் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய விளையாட்டு நிதியத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயரிக்கப்பட வேண்டும் | நிதியத்தின் நிர்வாக செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்காக நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு செயல்நடவடிக்கை திட்டமொன்று உரிய காலப்பகுதியில் தயரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 6,495,404 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 26,110,110 ஆக இருந்தது. அது நிதி விளைவுகளில் ரூபா 19,614,706 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. நிதி வருமானம் ரூபா 16,381,654 ஆல் அதிகரித்தமை மற்றும் நிதிச் செலவினம் ரூபா 3,233,052 ஆல் குறைவடைந்தமை இவ்வதிகரிப்பிற்கு பிரதானமான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊவா விளையாட்டு கழக கட்டிடம் மற்றும் விளையாட்டரங்கு திருத்தம் மற்றும் மேம்படுத்தலுக்காக நிதியத்தினால் ரூபா 2,500,000 செலுத்தப்பட்டிருந்த போதும் அவ்விளையாட்டுக் கழகத்தை தெரிவுசெய்தல் மற்றும் விளையாட்டு கழகத்தின் தேவைப்பாடு இனங்காணப்பட்ட முறை தொடர்பாக தெளிவாகவில்லை. அதற்கு மேலதிகமாக அதன் மூலம் விளையாட்டுத்துறைக்கான பங்களிப்பு மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு மற்றம் பின்தொடர் செயற்பாடுகள் | ஊவா விளையாட்டு கழகத்தின் பிரதான மேம்படுத்தலுக்காக செலவாகும் மொத்த கிரயத்தில் புகதியளவிலான பங்களிப்பாக ரூபா 2.5 மில்லியன் செலவிடப்பட்டதுடன் முழுத்தொகையையும் வழங்கப்படாமையால் நடைமுறை ரீதியாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு வெற்றிகரமான | விளையாட்டு நிதியத்தின் மூலம் வீளையாட்டரங்கு அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு நிதி வழங்கும் போது அத தொடர்பாக முறையான நடைமுறையொன்றை செயற்படுத்துதல் மற்றம் பின்தொடர் நடவடிக்கைகளை எடுத்தல். |

| | |
|---|---|
| மேற்கொள்ளப்படாதிருந்ததுடன்ன் நிதியத்தினால் இவ்வாறான கொடுப்பனவு தொடர்பாக நடைமுறையொன்று தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறையொன்று காணப்படவில்லை. எதிர்காலத்தில் முறையான பின்தொடர் நடவடிக்கையை செயற்படுத்துவதற்கு குறித்துக் கொள்கின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் வருமானம் ரூபா ரூபா 78 மற்றும் செலவினம் ரூபா 84 மில்லியனாக இருந்ததுடன் நிதியத்திற்குச் சொந்தமாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 129 மில்லியனாக இருந்தது. நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகள் முறையாக முகாமை செய்வதற்கு உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதிடப்பட்ட உள்ளவாறான செலவினங்களையும் ஒப்பிடும் போது 19 செலவின விடயங்களுக்கிடையே 12 சதவீதம் முதல் 1200 வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | முன்னைய ஆண்டின் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் எதிர்வரும் ஆண்டிற்காக எதிர் பார்க்கப்படுகின்ற செலவினங்களின் அடிப்படையில் பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியாயமான எதிர்கூறலொன்று பின்பற்றப்பட்டு பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதும் விளையாட்டு வீரர்கள் பதக்கங்களை வெற்றி கொள்ளல் போன்ற எதிர்பாரா காரணங்களின் பேரில் கொடுப்பனவு செய்வதற்காக எதிர்வுகூறல் சிரமமாகும். | பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் முரண்கள் தொடர்பாக காலரீதியில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |